இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
ஞாயிற்றுக்கிழமை 23-07-2023

# நிர்வாண தேசத்தில்...

எதைக் கற்பித்திருக்கிறது சமூகம்?

இரண்டு பெண்களின் உடை களையப்படுகிறது. உடை களைபவன் கொடூரன்.

உடை களையப்பட்ட பெண்ணை இழுத்து வருகிறது ஒரு கும்பல். எவருக்கும் குற்ற உணர்வு இல்லை.

இந்தக் கொடூரக் கும்பலை வேடிக்கை பார்க்கிறது இன்னும் பல கும்பல்கள். இவர்களுக்கு எந்த வெட்க உணர்வும் இல்லை.

இது மட்டுமா கொடூரம்?

**இதனை விட கொடூரம் ஒன்று உண்டு. 80 நாட்களாக எரியும் மணிப்பூர் பற்றி கருத்துச் சொல்லாமல் ஒருவர் இருக்கிறார். அவர்தான் இந்தியாவின் பிரதமர். இந்த எண்பது நாட்களில் உலகின் எத்தனையோ நாடுகளுக்குப் போய்த் திரும்பி விட்டார். 'இந்தியா ஜனநாயக நாடு' என்று வாய் கிழியப் பேசி விட்டார். இன்னும் சில நாடுகளில் விருதுகளே வாங்கி வந்துவிட்டார். இவர் விருதுகளைப் பெற்று கையொலி வாங்கிக் கொண்டு இருக்கும்போதுதான் - இங்கே மணிப்பூரில் இரண்டு பெண்கள் நிர்வாணம் ஆக்கப்படுகிறார்கள்.**

'குற்றவாளிகளை நான் விடமாட்டேன், சட்டத்தின்முன் நிறுத்துவேன்' என்கிறார் பிரதமர். பறந்த மானமும் தன்மானமும் அறமும் நெறியும் மீண்டும் கிடைக்குமா? இதே மாதிரியான வக்ரம், பா.ஜ.க. ஆளாத மாநிலத்தில் நடந்திருந்தால், என்ன பேசி இருப்பார் பிரதமர்? அந்த மாநிலத்தின் முதலமைச்சர்தான் அந்தப் பெண்களின் உடையைக் களைந்தார் என்று பேசி இருக்க மாட்டாரா? இப்போது வாயடைத்து நிற்கிறார்களே பிரதமர் நரேந்திர மோடியும், உள்துறை அமைச்சர் அமித்ஷாவும் - என்ன காரணம்?

பழங்குடியினர் அல்லாத உயர்ஜாதிப் பெண்ணுக்கு இது நடந்திருந்தால்...? பேசுவீர்களே மணிக்கணக்கில்! இப்போது வாயடைத்து நிற்க என்ன காரணம்? உலகின் ஐந்தாவது பெரிய ராணுவம், மணிப்பூரில் என்ன செய்தது?

மணிப்பூர் எரிய எண்ணெய் வார்த்தது உங்களது சட்டம். ஒன்றாய் வாழ்ந்த மக்களிடையே மதவேறுபாட்டை விதைத்து நச்சுக் கருத்துக்களைப் பரப்பி, வாக்கு வாங்குவதற்காக இலட்சக்கணக்கானவர்களின் வாழ்க்கையைக் கெடுத்தீர்கள். இதனால்தான் நூற்றுக்கணக்கில் மரணங்கள். பல்லாயிரக்கணக்கில் வேறு மாநிலம் போய்விட்டார்கள். சொந்த மாநிலத்தில் அகதி முகாம்களில் பதுங்கி இருக்கிறார்கள் மக்கள். வீடுகள் இடிக்கப்படுகின்றன. கடைகள் நொறுக்கப்படுகின்றன. வழிபாட்டுத் தலங்கள் எரிக்கப்படுகின்றன. இந்தியாவின் இரும்பு மனிதர் அமித்ஷா எங்கே போனார்? என்ன செய்ய முடிந்தது அவரால்?

80 நாட்களில் ஒரே ஒரு நாள்கூட மணிப்பூர் போகவில்லை பிரதமர். மணிப்பூரில் இருந்து வந்த எதிர்க்கட்சித் தலைவர்கள், பழங்குடி அமைப்பினரையாவது பார்த்தாரா? அதுவும் இல்லை. மணிப்பூர் பற்றி ஆலோசிக்க மிகத் தாமதமாக நடத்தப்பட்ட அனைத்துக் கட்சிக் கூட்டத்திலாவது கலந்து கொண்டாரா பிரதமர்? அதுவும் இல்லை. அவர் வெளிநாட்டில் இருக்கும் நேரமாகப் பார்த்து கூட்டத்தை நடத்தினார்கள். மணிப்பூர் ஆலோசனைக் கூட்டத்தை வெளிநாட்டில் நடத்தி இருந்தால் ஒருவேளை அவர் கலந்து கொள்ள வாய்ப்பு ஏற்பட்டிருக்கலாம்.

**ஆஸ்திரேலியவாழ் இந்தியர்கள், அமெரிக்க வாழ் இந்தியர்கள், இலண்டன் வாழ் இந்தியர்கள் மத்தியில் எல்லாம் போய் பேசும் பிரதமரால், இந்திய வாழ் இந்தியர்கள் முன்னால் ஏன் பேச முடியவில்லை? நிமிர்ந்து ஏன் நிற்க முடியவில்லை? நாடாளுமன்ற உறுப்பினர்களின் கண்ணைப் பார்த்து ஏன் பதில் பேச முடியவில்லை? 'இவை எல்லாம் தெரிந்து கொள்வதற்கு எண்பது நாட்களா?' என்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அல்ல; சொந்த பா.ஜ.க. உறுப்பினர்களே 'மனசுக்குள்' கேட்க மாட்டார்களா? நினைக்க மாட்டார்களா?**

மே மாதம் 4 ஆம் நாள் இந்தக் கொடூரம் நடந்துள்ளது. அந்த நாளில்தான் கர்நாடக மாநிலத்தில் வாகனம் முழுக்க பூக்கோலம் பூண நகர்வலம் வந்து, பா.ஜ.க.வுக்காக வாக்குக் கேட்டுக் கொண்டு இருந்தார் பிரதமர். மூன்று பெண்கள் உடை களையப்பட்டு உள்ளார்கள். இதனைத் தடுத்த ஒரு பெண்ணின் தந்தை கொலை செய்யப்பட்டுள்ளார். ஒரு பெண்ணின் சகோதரர் கொலை செய்யப்பட்டுள்ளார். இந்த வீடியோ வெளியானது சூலை 18. இப்போதுதான் மணிப்பூர் பா.ஜ.க. முதலமைச்சர் பிரேன்சிங் சொல்கிறார்: 'ஒரு குற்றவாளியைக் கைது செய்துவிட்டோம்' என்று!

வீடியோ வெளியாகி உலகம் கொதித்தபிறகு கைது செய்யலாம் என்று காத்திருந்தாரா? கைது செய்யப்பட்டது கூட உண்மையாக இருக்குமா எனச் சந்தேகமாக இருக்கிறது. "எங்களை வன்முறைக் கும்பல் புதருக்குள் வலுக்கட்டாயமாக இழுத்துச் சென்றார்கள். அப்போது போலீஸ் ஜீப் நின்று கொண்டிருந்தது. அதில் நான்கு போலீஸ்காரர்கள் உட்கார்ந்து இருந்தார்கள். வன்முறைக் கும்பல் எங்களை இழுத்துச் செல்வதை அந்த நான்கு போலீஸ்காரர்களும் பார்த்தார்கள். ஆனால் அவர்கள் எங்களுக்கு உதவவில்லை" என்று ஒரு பெண் பேட்டி அளித்துள்ளார். பா.ஜ.க. ஆட்சி எப்படி இருக்கும் என்பதற்கு உதாரணம் இந்த மணிப்பூர் காட்சி.

காவல் நிலையங்களில் - துணை ராணுவப் படையிடம் இருந்த துப்பாக்கிகளை வன்முறையாளர்கள் எடுத்துச் சென்று விட்டார்கள். அங்கு வன்முறையாளர்கள் கையில் இருப்பது எல்லாம் 'அரசாங்க' துப்பாக்கிதான். பா.ஜ.க. ஆட்சி எப்படி இருக்கும் என்பதற்கு உதாரணம் மணிப்பூரில் வெடிக்கும் துப்பாக்கி ரவைகள்.

**பத்தாண்டு காலமாக மணிப்பூரில் கிறித்துவ - சிறுபான்மை - பழங்குடி - மக்களுக்கு எதிராக மதவாதப் பிரச்சாரம் செய்தவர்கள் அல்லவா இந்தக் கொடூரத்துக்குக் காரணம்?**

**பத்தாண்டு காலமாக இந்திய சமூகப் பரப்பில் வெறுப்புணர்வுப் பேச்சுகளை விதைத்தவர்கள் அல்லவா இந்தக் கொடூரத்துக்குக் காரணம்?**

**நிர்வாணம் ஆக்கி அழைத்து வந்தவர்களை விட - வேடிக்கை பார்த்த மாநில பா.ஜ.க. அரசும், ஒன்றிய பா.ஜ.க. அரசும் அல்லவா இந்தக் கொடூரத்துக்குப் பொறுப்பேற்க வேண்டும்?**

எண்பது நாட்கள் கழித்து, 'அசிங்க வீடியோ' வெளிவந்த பின்னால், 'நாடு அவமதிக்கப்பட்டுள்ளது' என்று பிரதமர் சொல்வது எத்தகைய கொடூரச் சூழலில் மனித வாழ்க்கை சுற்றி வளைக்கப்பட்டுள்ளது என்பதை எடுத்துக் காட்டவில்லையா?

பா.ஜ.க.வின் பேரழிவுக்கு சாட்சியமாக இருக்கிறது மணிப்பூர்!



தலைமைச் செயலகத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (21.07.2023) தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலில் செயல்படும், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம், தீனதயாள் உபாத்தியாய ஊரகத் திறன் பயிற்சித் திட்டம் மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் ஆகியவற்றின் செயல்பாடுகளை குறித்து ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப. செந்தில்குமார், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் முதன்மை செயல் அலுவலர் திருமதி ச.திவ்யதர்சினி, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் திருமதி பா.பிரியங்கா பங்கஜம், கூடுதல் இயக்குநர்கள், இணை இயக்குநர்கள், அனைத்து மாவட்ட திட்ட இயக்குநர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல்பாடுகள்!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆய்வு செய்தார்!

**சென்னை, ஜூலை 23-**

**தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய வழிகாட்டுதலின் கீழ் செயல்பட்டு வரும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல்பாடுகளை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 21.7.2023 அன்று ஆய்வு செய்தார்.**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம், தீனதயாள் உபாத்தியாய ஊரகத் திறன் பயிற்சித் திட்டம் மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் ஆகியவை சிறப்பாக செயல்பட்டு வருகின்றன.

இந்த அமைப்புகளின் சார்பில் தமிழ்நாட்டின் ஊரக மற்றும் நகர்ப்புரப் பகுதிகளில் சுய உதவிக் குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் நகர்ப்புற பகுதி அளவிலான கூட்டமைப்புகள் போன்றவை அமைக்கப்பட்டு, பல்வேறு வறுமை ஒழிப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

சுய உதவிக் குழுக்களின் முன்னேற்றத்திற்காக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் செயல்படுத்தி வருகிறது. அத்திட்டங்களின் செயல்பாடுகள், அவற்றில் அடைந்துள்ள இலக்குகள், மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் போன்றவை குறித்து இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 21.07.2023 அன்று ஆய்வு மேற்கொண்டார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற இந்த ஆய்வில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள், பள்ளி மாணவ - மாணவியரின் பசியைப் போக்கும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தில் சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகள், இளைஞர் திறன் திருவிழாக்கள், சுய உதவிக் குழுக்கள் தயாரிப்புப் பொருட்களை சந்தைப்படுத்த மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள், மகளிர் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வரும் உதவிகள், கிராம மற்றும் நகர்ப்புறங்களில் செயல்படும் சமுதாயம் சார்ந்த அமைப்புகளின் செயல்பாடுகள், அவைகளுக்கு வழங்கப்பட்டு வரும் நிதியுதவிகள், பூமாலை வணிக வளாகங்களின் செயல்பாடுகள், திறன் பயிற்சிகள், வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டங்களின் செயல்பாடுகள் மற்றும் அரசின் நலத் திட்டங் களான மக்களைத் தேடி மருத்துவம் திட்டம், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் ஆகியவை குறித்து இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆய்வு செய்து, திட்டங்களை திறம்பட செயல்படுத்திட உரிய ஆலோசனைகளை வழங்கினார்.

மேலும், சட்டமன்ற கூட்டத் தொடரில் அறிவிக்கப்பட்ட பல்வேறு அறிவிப்புகளின் நிலை, குறிப்பாக சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. 30,000 கோடி வங்கிக்கடன் வழங்க நிர்ணயிக்கப்பட்ட இலக்கில் அடைந்துள்ள முன்னேற்றம், இலக்கை விரைந்து எய்திட மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகள் போன்றவை இந்த ஆய்வுக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு, உரிய ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப. செந்தில்குமார், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் முதன்மை செயல் அலுவலர் திருமதி ச.திவ்யதர்சினி, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் திருமதி பா.பிரியங்கா பங்கஜம், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் கூடுதல் இயக்குநர்கள், இணை இயக்குநர்கள், அனைத்து மாவட்ட திட்ட இயக்குநர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தேசிய ஹெலிகாப்டர் சேவை நிறுவனத்தை மீண்டும்

# ஒன்றிய அரசே ஏற்று நடத்தாதது ஏன்?

## மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 23-

ஹெலிகாப்டர் சேவைகளை வழங்கும் பொதுத்துறை நிறுவனமான, 'பவன் ஹான்ஸ்' நிறுவனத்தின் தனியார்மயமாக்கல் நிறுத்தத்தை தொடர்ந்து இந்நிறுவனத்தின் எதிர்காலத்தை குறித்து மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் மக்களவையில் கேள்விகள் எழுப்பியுள்ளார்.

விமானப் போக்குவரத்துத்துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள பொதுத்துறை நிறுவனமான பவன் ஹான்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் தனியார்மயமாக்குதலில் வென்ற ஏலதாரர் கூட்டமைப்புக்கு எதிராக தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாயத்தின் கொல்கத்தா அமர்வு பிறப்பித்த பாதகமான தீர்ப்புகளை தொடர்ந்து, ஏலதாரர் தகுதி நீக்கத்தினால் செயல்திட்ட பங்கு விற்பனையை அரசு ரத்து செய்தது.



இது தொடர்பான முடிவினை மேற்கொள்ளும் போது எந்தெந்த முக்கிய அமைச்சகங்கள், இத்துறைச் சார்ந்த அதிகாரிகள் யாரெல்லாம் பங்கேற்றனர் என்றும் அவர்களின் கருத்துக்கள் தொடர்பாகவும் ஒன்றிய விமான போக்குவரத்துத் துறை அமைச்சகத்திடம் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் கேள்வி எழுப்பினார்.

அதன் விவரங்கள் வருமாறு:

'பவன் ஹான்ஸ்' லிமிடெட் தனியார்மயமாக்கல் நிறுத்தப்படுவதற்கான காரணங்கள் மற்றும் பங்கு விலக்கல் இலக்குகள் மீதான தாக்கம் என்ன என்றும்,

தனியார்மயமாக்குதலை நிறுத்துவது தொடர்பான முடிவை மேற்கொள்ளும்போது எந்தெந்த அமைச்சகங்கள் மற்றும் இத்துறை சார்ந்த அதிகாரிகள் யாரெல்லாம் பங்கு பெற்றார்கள் என தெரிவிக்க வேண்டும் என கேள்வி எழுப்பினார்.

சம்பந்தப்பட்ட கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கு எதிரான தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயத்தின் (NCLT) உத்தரவின் தாக்கம் என்ன என்றும் "பவன் ஹான்ஸ்" லிமிடெட் நிறுவனத்தின் தனியார்மயமாக்குதலுக்காண அடுத்த கட்ட நடவடிக்கையை அரசாங்கம் எந்த விதத்தில் பார்க்கிறது என்றும் கேள்வியை எழுப்பினார்.

"பவன் ஹான்ஸ்" லிமிடெட் நிறுவனத்தைத் தக்கவைத்து, அதனை புத்துயிரூட்டும் பணிகளைத் ஒன்றிய அரசே மேற்கொள்வது குறித்து அமைச்சகம் பரிசீலிக்குமா என்றும் அப்படியானால், அதன் விவரங்கள் என்ன எனவும் கேள்வி எழுப்பினார்.

### 155 கோடி ரூபாய் செலவில்

# தாம்பரம் ரயில் நிலையத்தில் உட்கட்டமைப்பு வசதிகள்!

## கனிமொழி என்.வி.என். சோமு கேள்விக்கு ஒன்றிய அமைச்சர் பதில்!

புதுடெல்லி, ஜூலை 23-

சென்னையிலிருந்து தென்மாவட்டங்கள் மற்றும் டெல்டாபகுதிகளுக்கு பயணமாகும் பயணிகளுக்கு முக்கிய ரயில் நிலையமாக விளங்கும் தாம்பரம் ரயில் நிலையத்தில் அடிப்படை கட்டமைப்பு வசதிகள் போதுமான அளவுக்கு உள்ளதா? அதை மேம்படுத்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா? என்று மாநிலங்களவையில் தி.மு.க. எம்.பி. கனிமொழி என்.வி.என். சோமு கேள்வி எழுப்பியிருந்தார்.

அதற்கு ஒன்றிய ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் அளித்த பதில் வருமாறு:

தாம்பரம் ரயில் முனையத்தில்உட்கட்டமைப்புவசதிகளை மேம்படுத்த இரண்டு கட்டங்களாக திட்டமிடப்பட்டு, 49 கோடி ரூபாய் மதிப்பிலான முதற்கட்டப் பணிகள் முடிவடைந்துவிட்டன.

இரண்டாம் கட்டப்பணிகளுக்கு மேலும் 109 கோடி ரூபாய் தேவைப்படும் என்று கணக்கிடப்பட்டு, போதுமான நிதி ஒதுக்கப்பட்டு பணிகள் நடந்து வருகின்றன.



ரயில்வே திட்டங்களைப் பொறுத்தவரை, பொருட்கள் இடம் மாறுதல், விரிவாக்கப்பணிகளுக்கு தேவையான இடம்,அவற்றைக்கையகப் படுத்தும்போது எழும் சட்டச் சிக்கல்கள், ஓராண்டில் எவ்வளவு மாதங்கள் இடர்பாடின்றி வேலை செய்ய முடிகிறது என்பன போன்ற பல்வேறு காரணிகளைவைத்தே ஒவ்வொரு திட்டமும் எவ்வளவு விரைவாக முடிக்கப்படுகிறது என்பது நிர்ணயிக்கப்படுகிறது. தாம்பரம் ரயில் நிலைய கட்டமைப்பு மேம்பாட்டுப் பணியையும் விரைவாக முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு ஒன்றிய அமைச்சர் தெரிவித்தார்.



திருவெறும்பூர் தொகுதி காட்டூரில், அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தனது திருவெறும்பூர் தொகுதிக்குட்பட்ட காட்டூர், மண்டலம் 3, வார்டு எண் 37' இல் உள்ள மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் ரூ.87.50 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய கட்டிடத்தை திறந்து வைத்து சிறப்பித்தார். உடன் மாநகர செயலாளர் – மண்டலம் 3 தலைவர் மு.மதிவாணன், பகுதி செயலாளர் ஓ.நீலமேகம், வட்ட செயலாளர் தவசீலன், விஸ்வநாதன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.